Registered as a NewsPaper in Ceylon விலை சதம் 15 ★

# ஈழநாடு

THE EELANADU
National Tamil Daily

தபால் பெட்டி எண் 49
போன் 389

தேசிய தினசரி

மலர் 13
இதழ் 252

யாழ்ப்பாணம் ஐப்பசி 5 றமழான் 2 வெள்ளிக்கிழமை (22-10-71)

சகலவிதமான
றேடியோக்கள் — ரான்ஸிஸ்டர்
ஐஸ்பெட்டி (Refrigerator)
இஸ்திரிக்கைப்பெட்டி
முதலியன
சிறந்தமுறையில்
திருத்திக்கொடுக்கப்படும்
றேடியோ இன்ஜினியரிங் வேக்ஸ்
(பள்ளிவாசலுக்குப் பக்கத்தில்)
28, பஸார் ஒழுங்கை. யாழ்ப்பாணம்.

# செங்கலடிக் கூட்டத்தில் மகாநாடு பற்றி முடிவாகும்

## தமிழரசுக் கமிட்டி 23, 24-ல் கூடுகிறது

யாழ்ப்பாணம், வெள்ளி
தமிழரசுக்கட்சியின் வருடாந்த மகாநாடு பற்றி செங்கலடியில் நடைபெறவிருக்கும் மத்திய செயற்குழுக் கூட்டத்தில் முடிவுசெய்யப்படும்.

இம்மாதம் 23-ம், 24-ம் திகதிகளில் தமிழரசுக்கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டம் செங்கலடியில் நடக்கவிருக்கிறது.

இக்கூட்டத்தில் மகாநாடு பற்றியும் மற்றும் இன்றைய முக்கிய அரசியல் பிரச்னைகள் குறித்தும் ஆராயப்படுமென்று கட்சிப்பிரமுகர் ஒருவர் தெரிவித்தார்.

இனிதொடர்ச்சியில் நடைபெறவிருந்த தமிழரசுக் கமிட்டியின் மகாநாட்டை ஒத்திவைப்பதென்று இதுவரை எவ்வித முடிவும் எடுக்கப்படவில்லையென்றும், ஒத்திவைப்பதா இல்லையா என்பதுபற்றி செங்கலடியில் நடக்கும் மத்திய செயற்குழுக் கூட்டத்தில் முடிவாகும் என்றும் அந்தப் பிரமுகர் தெரிவித்தார்.

இம்மாதம் 23-ம் திகதி மாலை முதலமைச்சர் டாக்டர் ... சென்ற டாக்டர் நாகநாதன் நினைவுதினக்கூட்டமொன்றும் நடைபெறும். தமிழரசுத்தலைவர்கள் இக்கூட்டத்தில் கலந்துகொண்டு சொற்பொழிவாற்றுவர்.

## 'எதிர்காலச் சந்ததியின் தலைவிதியே தங்கியுள்ளது'

### கல்வி பற்றி வித்தியாதிபதி

யாழ்ப்பாணம், வெள்ளி
"கல்வி வாழ்விற்கு ஒரு சாதனமாகக் கொள்ளாது அடிப்படை தேசிய முக்கியத்துவம் வாய்ந்ததுவும், அடுத்த பல்லாண்டுகளுக்கு எம் வருங்கால சந்ததியின் தலைவிதியை நிர்ணயிக்கக் கூடியதாகவும் அமைய வேண்டும்."

இவ்வாறு வடமாநில வித்தியாதிபதி திரு டபிள்யூ. ட. சி. மகாதந்தில கூறினார்.

பாடசாலைகளில் இடவசதியின்மையாலும் தளபாடம், ஆய்வுகூடம், விஞ்ஞான உபகரணம் இல்லாதிருப்பதுவும் வடபகுதி மாணவருக்கு உள்ள பெருங்குறைதான். படிப்படியாக இக்குறைப் பூர்த்திசெய்யக் கல்வி இலாகா முயற்சி செய்து வருகிறது.

இப்பாடசாலை அதிபர், உதவியாசிரியர்கள், மாணவர், பெற்றோர் பாடசாலையின் வளர்ச்சியில் அக்கறை கொண்டுள்ளதுபற்றி நான் பெருமைப்படுகின்றேன். கல்லூரி வளவு துப்புரவாகவும் கல்வித்துறையில் நல்ல பெறுபேற்றைப் பெற்றுள்ளதுவும் போற்றக்கூடியது.

மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயப் பரிசில் விழாவில் திரு மகாதந்தில பிரதமவிருந்தினராகக் கலந்து கொண்டார்.

பரிசில் விழாவுக்கு வித்தியாலய அதிபர் பண்டிதர் செ. சிவலிங்கம் தலைமை வகித்தார். வித்தியாலய விஞ்ஞான ஆய்வுகூடத்தை வித்தியாதிபதி திறந்துவைத்தார்.

திருமதி இ. நவரத்தினம் பரிசில் வழங்கினார். கலை நிகழ்ச்சிகளும் நடைபெற்றன.

சாவகச்சேரி எம். பி. திரு வ. ந. நவரத்தினம் விழாவில் கலந்துகொண்டு உரையாற்றினார்.

அவர் பேசுகையில், "மகா வித்தியாலயங்கள் பேர்ப் பலகையில் மட்டும் மகாவித்தியாலயம் என்று இருக்காது கல்வி அறிவு ஊட்டுவதிலும் விருத்தி செய்ய வேண்டும். இந்த 'வீரசிங்கம் மகாவித்தியாலயம்' சகலதுறைகளிலும் அபிவிருத்தியடைந்துள்ளது" என்றார்.

## 'எந்தத்தொழிலைச்செய்யவும் தயங்கக் கூடாது'

சங்கானை, வியாழன்
"ஒருவர் செய்யும் தொழிலைக்கொண்டு அவர்களைப் பிரித்துப்பார்க்கும் குணம் எம்மிடமிருந்து அகலவேண்டும். கால சந்தர்ப்பத்திற்கேற்ப பிற்போக்கான எண்ணங்களை தவிர்க்கப்படவேண்டும். படித்தும் பட்டங்கள் பெற்றுள்ள ஆயிரக்கணக்கான பட்டதாரி வாலிபர்கள் வேலையில்லாத் திண்டாட்டத்திற்காளாகி அலைந்து திரிவதை நாம் நேரில் காண்கின்றோம். இச்சந்தர்ப்பத்தில் எந்தவித தொழிலையும் செய்ய இளைஞர் சமுதாயம் தயங்கக்கூடாது. கலை, கலாச்சாரம், விவசாயம், சுகாதாரம் போன்றவற்றிலும் குடிசைக் கைத்தொழில் ஆகியவற்றிலும் அக்கறை கொண்டு முன்னணியிற் சேர்ந்து தொழில் உற்பத்தியை ஆரம்பித்தல் வேண்டும். அரசாங்க உத்தியோகங்களை எதிர்பார்ப்பதிலும் நாமே எமது சொந்த முயற்சியால் பலவகையில் தொழில் ஆரம்பிக்கலாம். இதனால் எமது சுயதேவை பூர்த்தியாவதுடன் ஏழைக்குடும்பங்களும் புத்துணர்ச்சிபெற்று நாடும் பயன்பெறும். எதிர்கால இளைஞர்களால் சாதிக்கக் கூடியவை பல. அவை எம் சந்ததியினருக்கும் பயன்பெறும் வகையில் அமைய வேண்டும்."

மேற்கண்டவாறு திரு. எஸ். புண்ணியமூர்த்தி அராலி சரஸ்வதி சனசமூக நிலையத்தின் 23-வது ஆண்டு நிறைவுவிழாவில் "வளரும் இளைஞர் சமுதாயத்தின் பங்கு" என்னும் பொருள் பற்றி ... டார். வே. ஐயாத்துரை மற்றும் பலர் பேசினர்.

## றம்ழான் நோன்பு ஆரம்பம்

கொழும்பு, வியாழன்
முஸ்லிம்களின் றம்ழான் நோன்புநாளை வெள்ளிக்கிழமை அதிகாலையில் ஆரம்பமாவதாக முஸ்லிம் பெரியார்கள் அறிவித்துள்ளனர்.

நகரசபைகளில்

## இரட்டைப் பதிவு முறை

கொழும்பு, வியாழன்
அடுத்த வருடத்திலிருந்து நாட்டிலுள்ள சகல நகரசபைகளுக்கும் தங்கள் வழக்குவைப்புக்களில் இரட்டைப் பதிவுமுறையைக் கையாளவிருக்கின்றன. அடுத்தமாதம் புதிய நிதி நிலை அறிக்கை ஆகின்றதனால் ... தாக்கல் செய்யப்பட விருப்பதால் நகரசபைகளையும் தம் கணக்குகளைச் சரியாக வைத்துக் கொள்ளும்படி கேட்கப்பட்டுள்ளன.

பஸ்-லொறி

## விபத்தில் 5 பேர் மரணம்; 55 பேர் காயம்

கோட்டை, வியாழன்
வெலிகமைப் பகுதியைச் சேர்ந்த நெலுத்தெனியாச் சந்தியில் நடந்த பஸ்-லொறி விபத்தொன்றில் 5 பேர் மரணமானதுடன் 55 பேர் காயமடைந்துள்ளனர். இவ்விபத்தில் பிரயாணிகளுடன் சென்ற பஸ் குடைசாய்ந்தது. காயமுற்றோர் கோலை ... வைத்தியசாலையிலும் ... வைத்திசிச்சை ... பெற்றுவருகின்றனர்.

## இந்தியா-இலங்கை கப்பல் சேவை

கோட்டை, வியா.
இந்தியாவுக்கும் இலங்கைக்குமிடையிலான கப்பல்சேவை நவம்பர், டிசம்பர் மாதங்களில் நடைபெறமாட்டாது.

இப்பொழுது ஏற்பட்டுள்ள சீரற்ற காலநிலையின் காரணமாக இந்தக்கப்பல் சேவை நிறுத்தப்படுவதாகத் தெரிகிறது.

ஸ்ரீமா-சாஸ்திரி ஒப்பந்தத்தின்கீழ் தாயகம் திரும்பும் இந்திய வம்சாவழியினரின் பிரயாணங்கள் இதனால் தடைபடுமென்று தெரிகிறது.

கொழும்பிலிருந்து தலைமன்னார் வரை செல்லும் ரயில் சேவை இம்மாதம் 28-ம் திகதிவரைக்கும் நீடிக்கும் என்று தெரியவருகிறது.

ஜனவரி 3-ம் திகதி மீண்டும் இந்தியாவுக்கும் இலங்கைக்குமிடையிலான கப்பல் சேவை ஆரம்பமாகுமென்று தெரிகிறது.

நோபல் பரிசு பெற்ற

## மே. ஜெர்மன் பிரதமருக்கு கொஸிஜினின் பாராட்டு

ஒட்டாவா, அக். 21
சமாதானத்துக்கான நோபல் பரிசுபெற்றுள்ள மேற்கு ஜெர்மன் பிரதமர் விலிபிராண்டை இப்போது கனடாவிலுள்ள சோவியத் பிரதமர் அலெக்ஸி கொஸிஜின் வெகுவாகப் பாராட்டியுள்ளார்.

1970—1971ம் ஆண்டுக்கான சமாதான நோபல் பரிசு மேற்கு ஜெர்மன் பிரதமருக்கு வழங்கப்பட்டிருப்பது தெரிந்ததே.

ஐரோப்பிய ஒற்றுமைக்கும், அமைதிக்கும் இருபிராண்ட் ஆற்றிய பணிக்காகவும், கிழக்கு மேற்கு ஜெர்மனி உறவுகளைப் பலப்படுத்த அவர் எடுத்த நடவடிக்கைகளுக்கும் நோபல் பரிசுக்குழு வெகுவாகப் புகழ்ந்துள்ளது.

அமெரிக்க அதிபர் திரு நிக்ஸனும், ஐ நா பொதுச் செயலாளர் யுதாண்டும், திரு பிராண்டைப் பாராட்டிச் செய்திகள் அனுப்பி வைத்துள்ளனர்.

## ஆய்வுகூடம்

நாவடி, புதன்
கொக்குவில் ஞானபண்டித வித்தியாசாலையின் புதிய விஞ்ஞான கூடத்தை வடமாநில விஞ்ஞான கல்வி அதிகாரி திரு. எம். அற்புதநாதன் குத்துவிளக்கேற்றித் திறந்து வைத்தார். தலைமை ஆசிரியர் திரு. க. கருமலிங்கம் வைபவத்திற்குத் தலைமைவகித்தார். ஆசிரியர் திரு. பொ. நடராசா நன்றி தெரிவித்துப் பேசினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்

இயந்திரங்கள், இயந்திர உதிரிப்பாகங்கள், உபகரணங்கள், ஒட்டுவேலைகள், பல்லுச்சக்கரம் வெட்டுதல் (Gear wheel cuttnig) என்ஜினியர்களின் மேற்பார்வையில் செய்து கொடுக்கப்படும். ராஜா மெசின் கொம்பனி 95, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 3625

### தேவை

தென்னந் தோட்டத்தில் வேலைசெய்வதற்கு விவசாயம் கற்ற அல்லது விவசாயத்தில் அனுபவம் வாய்ந்த ஒருவர்தேவை. கோழி, மாடு செம்மறி வளர்ப்பதற்குத் தோட்டத்தில் வசதிகள் உள்ளன. இத்துறையில் ஆர்வம் உள்ள அனுபவம் அல்லது தகைமைகள் உடையகஷ்டப்பட்டு உழைக்கக்கூடியவர்கள் மட்டுமே விண்ணப்பிக்கலாம். சம்பள அடிப்படையில் நியமனம் வழங்கப்படும். சம்பளம் பேச்சுவார்த்தை மூலம் நிர்ணயிக்கப்படும். அல்லது பங்கு அடிப்படையிலும் வழங்கப்படலாம். இருப்பிடவசதி அளிக்கப்படும். (2) வளர்ப்பதற்கு 50ல் இருந்து 100 வரை செம்மறி மறிமாடுகள் தேவை. சராசரி விலையும் எதிர்பார்க்கும் விலையையும் அறிவிக்கவும். விளம்பர இல.3666, C/O ஈழநாடு லிமிட்டெட், யாழ்ப்பணம். 3666

அப்பளம் தயாரிப்பதற்கு ஏற்ற உழுந்து மா, நவீன இயந்திரங்கள் மூலம் அனுபவமிக்க தொழிலாளர்களால் அரைத்து அரித்துக் கொடுக்கப்படும். விபரங்களுக்குத் தொடர்பு கொள்ளவும். முகமது இஸ்மயில் மில் 443, கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம். தொலைபேசி 611. 3675

### விற்பனைக்கு

ராதா சேவிப் பவுடர்: மனோரம்மியமான வாசனை கொண்ட சேவிப் பவுடர் கோவில்களிலும் விழாக்களிலும், கோடாத் தயாரிப்பதற்கும் மிகவும் உபயோகமானது. எஸ். சுப்பிரமணியம் கொம்பனி 53, சங்கேசன் துறை வீதி, யாழ்ப்பாணம். 160, செட்டியார் தெரு, கொழும்பு. 3624

### தேவை

கைத்தறியில் நெசவு செய்ய அனுபவமுள்ள பெண்கள் தேவை. டொபியில் வேலை செய்யக் கூடியவர்கள் விரும்பத்தக்கது. சந்தபுரம் மில்ஸ், 7, 2ம் ஒழுங்கை, பிரவுண் வீதி, யாழ்ப்பாணம். 3639

சோப் செய்வதில் அனுபவம் வாய்ந்தவர் ஒருவர் தேவை அனுபவத்திற்குரிய சான்றிதழ்களுடன், பெற விரும்பும் சம்பளத்தையும் குறிப்பிட்டு 31-10-71க்கு முன் விண்ணப்பிக்கவும்: விளம்பர இல. 3681 C/O ஈழநாடு, யாழ்ப்பாணம். 3681

### விற்பனைக்கு

அலுக்கை, அளவெட்டியில் 5 பரப்புத் தோட்டக் காணியும் 6 பரப்பு வெறுங்காணியும் விற்பனைக்கு உண்டு. விரும்புவோர் தொகையுடன் விண்ணப்பிக்கவும்: விளம்பர இல.3678 C/O ஈழநாடு யாழ்ப்பாணம். 3678

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் நினைவு முத்திரையின் முதல் நாள் உறை ஒன்று -/15 சதம் ஒருடசின் தபால் செலவுடன் ரூபா 2/- விபரங்களுக்கு சி. செ. முத்துக்குமாரு-ஏ. சி. ஸ்ரேசனேஸ் 6, மெயின் வீதி, தபால் பெட்டி 74, யாழ்ப்பாணம். 3680

### சர்வாலயதீபத் திருத்தம்

இவ்விரோதிகிருது வருஷ வாக்கிய பஞ்சாங்கத்தில் கார்த்திகை மாதத்தில் 16-ம்திகதி (2-12-71) குறிக்கப்பட்ட சர்வாலய தீபத்தை (விடுகளில் தீபம்) கார்த்திகை மாதம் 15 ம் திகதி புதன்கிழமை (1-12-71) வைக்கொள்ளும்படி கேட்டுக் கொள்ளுகிறோம். இப்படிக்கு, இ. வெங்கடேசஐயர் வாக்கிய பஞ்சாங்க கணிதர். 3087


கேதீஸ்வரம், வியா

கடந்த ஒரு மாதகாலமாகக் கேதீச்சரத்தில் அனுஷ்டிக்கப்பட்டுவந்த கேதார கௌரி நோன்பு முடிவுற்றது. இம்முறை வழக்கத்திற்குமதிகமாக அடியார்கள் இங்குள்ள மடங்களில் தங்கியிருந்து விரதம் நோற்றனர்

# கொழும்பு இரத்தினம் கழகம் வென்றது

பருத்தித்துறை. வியா.

நிமாவனிற் தினத்தன்று நெல்லியடி மத்தியமகா வித்தியாலய மைதானத்தில் கொழும்பு இரத்தினம் விளையாட்டுக்கழகமும், வதிரி பொமேஸ் கழகமும் கலந்து கொண்ட உதைபந்தாட்டப் போட்டி கவர்ச்சிகரமான போட்டியாக அமைந்தது.

ஆயிரக்கணக்கில் மக்கள் திரண்டுவந்து இருதரப்பினருக்கும் 'சபாஷ்' வழங்கினர். ஆட்டம் ஆரம்பத்திலிருந்தே விறுவிறுப்பாக நடந்த போதிலும், ஆட்டத்தின் இறுதியில் உணர்ச்சி உச்சக்கட்டத்தை அடைந்தது. இறுதியில் இரத்தினம் கழகம் நாலு கோல்களையும் பொமேஸ் இரண்டு கோல்களையும் போட்டன. இரத்தினம் கழகத்தைச் சேர்ந்த அப்பையாவின் ஆட்டமும் பொமேஸ் கழகத்தைச் சேர்ந்த வேதாரணத்தின் ஆட்டமும் பாராட்டப்பட்டன.

நெல்லியடி மத்தியமகா வித்தியாலய அதிபர் திரு. க சிவசிதம்பரம் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார்.

## நெல்லியடி வெற்றி

பருத்தித்துறை. வியா.

நெல்லியடி மத்திய மகா வித்தியாலய இரண்டாவது கோஷ்டிக்கும் யாழ். மத்திய கல்லூரி இரண்டாவது கோஷ்டிக்குமிடையில் நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டியில் நெல்லியடிக் கோஷ்டி 2—1 கோல்களால் வெற்றியீட்டியது. பருத்தித்துறை கல்விவட்டார விளையாட்டு அதிகாரி திரு எஸ் கதிர்காமத்தம்பி மத்தியஸ்தம் வகித்தார்.

மேற்படிகல்லூரிகளின் 3வது பிரிவுக் கோஷ்டிகள் மோதியபோது. இரு கோஷ்டிகளும் தலா ஒரு கோல் போட்டு ஆட்டத்தை வெற்றி தோல்வியின்றி முடித்துக் கொண்டன. திரு எஸ் இராஜசிங்கம் இப்போட்டிக்கு மத்தியஸ்தம் வகித்தார்.

o o o

பருத்தித்துறை. வியா.

நெல்லியடி மத்திய மகா வித்தியாலய இரண்டாம் மூன்றும் கோஷ்டிகளுக்கும் ஏழாலை மகாவித்தியாலய இரண்டாம் மூன்றும் கோஷ்களுக்குமிடையில் நேற்று நடைபெறவிருந்த உதைபந்தாட்டப் போட்டியில் ஏழாலைக் கோஷ்டிகள் கலந்துகொள்ளாத காரணத்தால் நெல்லியடிக் கோஷ்டிகள் வெற்றியீட்டியதாகக் கொள்ளப்பட்டது

வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

வெள்ளி 22-10 71

(செய்திகள்: காலை 6-30, பகல் 12-45 மாலை 6-00, இரவு 9-00)

294 மீ அல்லது 59 மீ

காலை 6-15 நாதாஞ்சலி, 6-20 சைவநற்சிந்தனை, 6-25 இஸ்லாமிய நற்சிந்தனை, 7-00 உரைச்சித்திரம், 7-15 பண்ணும் தமிழ், 7-45 மெல்லிசை, 8-00 பகலுக்குரான் 8-15 இஸ்லாமிய பாடல்கள்.

இரவு 6-10 இடைவேளை, 6-15 இரு வலி னிசை, 6-30 பஞ்சபூத திருவண்ணாமலை, 7-00 மாதர் நிகழ்ச்சி, 7-30 மெல்லிசைப்பாடல், 7-45 முத்திதெறி, 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 விஞ்ஞான உரைநிகழ்ச்சி, 9-40 பாட்டு 10-30 செய்தித் தொகுப்பு.

## பேசாலை டின்மீன் தொழிற்சாலை

கேதீஸ்வரம், வியாழன்

'பேசாலை டின்மீன் தொழிற்சாலையை மூடும் நோக்கம் தமக்கு இல்லையென்றும் அதே சமயத்தில் அது இலாபகரமாக இயங்குவதற்கான ஆலோசனைகளை வரவேற்பதாகவும் கடற்றொழில் அமைச்சர் திரு. ஜோர்ஜ் ராஜபக்ஸ தம்மை நேரில் சந்தித்துப் பேசிய போது மன்னார் மாவட்டத் தூதுகோஷ்டி யொன்றிடம் தெரிவித்துள்ளார்.

ஜனாப் என் எஸ் ஏ காதர் தலைமையில் சென்ற அத் தூதுக்கோஷ்டி கடற்றொழில் அமைச்சரைச் சந்தித்த போது பேசாலை டின்மீன் தொழிற்சாலை மூடப்படுவதை ஆட்சேபித்தது.

மன்னார் மாவட்டத்திலுள்ள ஒரே ஒரு தொழிற்சாலை பேசாலை டின் மீன் தொழிற்சாலைதான். அது நட்டத்தில் இயங்குவதால் ஒன்றில் அது மூடப்பட வேண்டும் அல்லது வேறிடத்திற்கு மாற்றப்பட வேண்டும் எனச் சில மாதங்களுக்கு முன்னர் கடற்றொழில் விசாரணைக்குழு அதன் அறிக்கையொன்றில் சிபார்சு செய்திருந்தது. அச் சிபார்சை அமுலாக்க வேண்டாமென்று மன்னார்த் தூதுகோஷ்டி அமைச்சரைக் கேட்டுக்கொண்டது.

கழிபுரம், வியா

பொன்னாலை வரதராசப் பெருமான் ஆலயத்தில் நடைபெற்ற சனீஸ்வரன் கட்டி எரிப்பு வைபவத்தின் போது கோவில்பெருமை பற்றி பண்டிதர் இரா. சுப்பிரமணியம் உரையாற்றினார்.


ராணி (யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள், ஜெய்சங்கர் — விஜயலலிதா நடித்த

நூற்றுக்கு நூறு

வின்ஸர் (யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள்

ஜெமினி - சௌகார் ஜானகி (இரு வேடங்களில்)

ரவிச்சந்திரன் - எம். ஆர். ஆர். வாசு நடித்த

காவியத்தலைவி

லிடோ [யாழ்நகர்]

காலை 10-00 பி. ப. 2-00 மாலை 6-00, இரவு 9-30.

ராஜேஷ்கன்னா

ஷர்மிளா தாகூர்

சுஜித்குமார்

மதனாஜலால்

நடித்த

சக்தி பிலிம்ஸ்



ஈஸ்ட்மன்கலர் சித்திரம்

ஆராதனா

3.வது வாரம்

வெலிங்டன் (யாழ்ப்பாணம்)

பி.ப. 2-30 மாலை 6-30 இரவு 10-00 சனி, ஞாயிறு, 4 காட்சிகள்.

அக்கா தங்கை

* ஜெய்சங்கர் * கே. ஆர். விஜயா

* சுந்தரராஜன் சௌகார் ஜானகி

இன்னும் பலர் நடிக்கும்.

ராஜா (யாழ்ப்பாணம்) (தினசரி 4காட்சிகள்)

எம். ஜி. ஆர்- ஜெயலலிதா நடித்த

ஒளிவிளக்கு

நாகம்ஸ்சினிமா சுன்னாகம்

தினசரி 4-30 சனி. ஞாயிறு 10-30

LOOK IN ANY WINDOW

தினசரி 6-30, 9-45 சனி, ஞாயிறு 2-30

மதுரை வீரன்

MANOHARA
Jaffna
Daily 10-30 a.m., 4,7, 9-45 p m.
John Wyne
in
HATARI
Please book early. Special concession for a group of 50 and over.

வெல்லிசினிமா (மானிப்பாய்)

தினசரி 2-30, 6-30, 10-00

சிவாஜி - வாணிஸ்ரீ நடித்த

நிறைகுடம்

றீகல் (யாழ்ப்பாணம்)

தினசரி பி. ப. 2-00, 10-00

எம். ஜி. ஆர்- சரோஜாதேவி நடித்த

தாலி பாக்கியம்

Daily 5-15 & 7-15 p.m.
Sat. Sundays 10-30
Sidney Poitier
in
TO SIR WITH
LOVE

## அன்பு வெளியீடு

V ம் தர மாணவர் பரீட்சைக்கு முன்பு பயிற்சி பெற - வழிகாட்டியைத் தழுவி ஆக்கப்பட்ட வினாப் பத்திரங்கள். அனுபவம் மிக்க ஆசிரியர் எழுதியவை.

1. ஐந்தாந்தரக் கணித வினாப்பத்திரங்கள் - 60 ச.
2. ஐந்தாந்தரத் தமிழ் வினாப்பத்திரங்கள் - 60 ச.
3. ஐந்தாந்தரச் சூழல் வினாப்பத்திரங்கள் - 60 ச.
4. ஐந்தாந்தர ஆங்கில வினாப்பத்திரங்கள் - 60 ச.
5. ஐந்தாந்தர இந்துசமய வினாப்பத்திரங்கள் - 60 ச.

ஷை நூல்கள் ஆக்கியவர்:

வே. க. கந்தசாமி (புதுமைலோலன்)

6. ஐந்தாந்தர இஸ்லாம் வினாப்பத்திரங்கள் - 60 ச

ஆக்கியவர்: செல்வி பாத்திமா அப்துல்காதர்

ஃ விற்பனையாளருக்குக் கழிவுண்டு.

ஃ வி. பி. கவனிக்கப்படும்.

விற்பனையாளர்

ஸ்ரீ லங்கா புத்தகசாலை, யாழ்ப்பாணம். | அன்பு புத்தகசாலை 27 டி, பெரியகடை, யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# பாரத-பாக். பிரதிநிதிகளுடன் யுதாண்ட் ஆலோசனை

நியூயோர்க், அக். 21

பாரத-பாகிஸ்தான் எல்லையில் ஏற்பட்டுள்ள மோசமான நிலைமை குறித்து ஐ.நா பொதுச் செயலாளர் மேற்படி இரு நாடுகளின் ஐ.நா பிரதிநிதிகளையும் தனித்தனியே சந்தித்து ஆலோசனைகள் நடத்தியுள்ளார்.

இந்தியாவின் ஐ.நா. நிரந்தரப் பிரதிநிதி திரு சமர் சென்னையும், பாகிஸ்தான் நிரந்தரப் பிரதிநிதி திரு ஆகா ஷாஹியையும் யுதாண்ட் தனித்தனியாக சந்தித்து இரு நாடுகளுக்குமிடையிலுள்ள எல்லைகளில் ஏற்பட்டுள்ள பூசல்நிலைமை மோசமாகிவிடக்கூடாதென்று கவலை தெரிவித்திருக்கிறார் என்றாலும் எல்லையில் ஏற்பட்டுள்ள குமுறல்களை அதற்கான உறுதியான யோசனை எதையும் அவர் வெளியிட்டிருப்பதாகத் தெரியவில்லை.

கிழக்கு வங்க நிலைமை குறித்து முன்பு யுதாண்ட் கூறிய கருத்து இப்பொழுது மெய்யாகிவிட்டதாகவும், அதனை அசட்டை செய்ய முடியாதென்றும் நியுயோர்க் டைம்ஸ் பத்திரிகை கட்டுரையொன்றில் தெரிவித்துள்ளது. பாரத பாகிஸ்தான் எல்லையில் உருவாகியுள்ள நிலைமை இருபகுதியினருக்குமிடையில் நேரடி மோதலாக மாறிவிடாதபடி ஐ.நா. குறுக்கிடவேண்டும் என்று அப்பத்திரிகை குறித்து வெளியிட்டிருக்கின்றது.

கிழக்குப் பாகிஸ்தானில் விடுதலைப் படையினர் மேற்கொண்டுள்ள நடவடிக்கைகளைப் பயன்படுத்தி பாகிஸ்தான் இந்தியாமீது போர் தொடுக்குமானால் இந்தியா தக்கமுறையில் பதிலடி கொடுக்கும் என புதுடில்லியில் உயர்தர அதிகாரி ஒருவர் கூறினார்.

கிழக்குப் பாகிஸ்தானில் கஸ்பா பகுதியில் விடுதலைப் படையினர் தொடர்ந்து முன்னேறிவருவதாக செய்திகள் வருகின்றன. கொரில்லாக்களின் கடும்தாக்குதல்களை சமாளிக்கமுடியாமல் சிலதினங்களுக்குமுன் ராணுவத்தினர் விமானங்கள் மூலம் குண்டு வீசியதாகவும் இதனால் ஏராளமான கிராமவாசிகள் கொலையுண்டதாகவும் கூறப்படுகின்றது.

இந்திய எல்லையில் திரிபுரா பகுதியில் பாகிஸ்தான் படைகள் தொடர்ந்து குண்டுவீசிவருவதாக இந்திய செய்திகள் கூறுகின்றன. நேற்றைய சம்பவம் ஒன்றில் 4 கிராமவாசிகள் கொல்லப்பட்டனர் 10 பேர் காயமடைந்தனர்.

### பந்தோபஸ்து சபைஉத்தரவு

# தென்னாபிரிக்கா நமீபியாவிலிருந்து வெளியேற வேண்டும்

நியூயோர்க் அக் 21

தென்மேற்கு ஆபிரிக்காவிலிருந்து வெளியேறும்படி ஐ நா பாதுகாப்பு சபை தென்னாபிரிக்காவைப் பணித்துள்ளது.

நமீபியா என்று அழைக்கப்படும் தென்மேற்கு ஆபிரிக்காவிலிருந்து வெளியேறும்படி வலியுறுத்தி உலக நீதிமன்றம் முன்பு அளித்த தீர்ப்பு ஒன்றை அனுசரித்து ஐ நா பந்தோபஸ்து சபை இப்பொழுது இந்த உத்தரவை விடுத்துள்ளது.

ஐந்து ஆண்டுகளுக்கு முன்பு ஐ நா பொதுச்சபையும் இப்படியான ஒரு தீர்மானத்தை நிறைவேற்றி தென்னாபிரிக்காவை நமீபியாவிலிருந்து வெளியேறும்படி கேட்டுக்கொண்டது ஆனால் அந்த உத்தரவை தென்னாபிரிக்கா அப்பொழுதும் நிராகரித்துவிட்டது. நமீபியாவைத் தனது பொறுப்பில் விட்டுவிடும்படி ஐ நா பொதுச்சபை அப்பொழுது தென்னாபிரிக்காவைக் கேட்டிருந்தது. நமீபியாவைக் கைவிட்டு வெளியேறும்படி பந்தோபஸ்து சபை நிறைவேற்றிய தீர்மானத்தை 13 நாடுகள் ஆதரித்தன. எந்த நாடும் எதிர்த்து வாக்களிக்கவில்லை. பிரிட்டனும் பிரான்சும் வாக்கெடுப்பில் கலந்துகொள்ளவில்லை.

நமீபியா உலகநாடுகள் சபையின் கட்டளைப்படி தென்னாபிரிக்காவினால் ஆளப்பட்டுவந்தது. ஆனால் ஐ நா சபை இந்தக் கட்டளைமீது உரிமை பாராட்டுவதை தென்னாபிரிக்கா மறுத்துவிட்டது. இனவெறி நிறத்துவேஷத்தை தென்னாபிரிக்கா புகுத்திவருவதாகவும் தென்மேற்கு ஆபிரிக்காவைச் சுரண்டுவதாகவும் இதர ஆபிரிக்க நாடுகள் புகார் தெரிவித்து வந்துள்ளன.

தென்மேற்கு ஆபிரிக்காவின் நிர்வாகத்தை எடுத்து நடத்தவும் சுதந்திரம் கிடைக்க வழிசெய்யவுமென 11 நாடுகளின் குழுவொன்றை 1968-ம் ஆண்டில் ஐ நா மகாசபை நிறுவியது. 1968-ம் அதே ஆண்டில் தென்மேற்கு ஆபிரிக்காவுக்கு நமீபியா என்ற பெயரை ஐ நா பொதுச்சபை வழங்கியது. ஐ நா நமீபியாவின் நிர்வாகத்தை மேற்கொள்வதற்கு தடையாய் இருப்பதாக ஐ நா பாதுகாப்புசபை தென்னாபிரிக்காவை 1969-ம் ஆண்டு கண்டித்தது.

உலக நீதிமன்றம் தென்னாபிரிக்காவின் போக்கைக் கண்டித்ததுடன் தென்மேற்கு ஆபிரிக்காவில் தொடர்ந்து அதிகாரம் செலுத்துவது சட்டவிரோதம் என்றும் தீர்ப்பளித்தது. இந்தத் தீர்ப்பையும் தென்னாபிரிக்கா அலட்சியம் செய்துவிட்டது. இந்தத்தீர்ப்பை அனுசரித்து இப்பொழுது ஐ நா பாதுகாப்புச்சபை நிறைவேற்றியுள்ள தீர்மானத்தை தென்னாபிரிக்கா மதிக்குமா என்பது இனிமேல்தான் தெரியவரும்.

### நாளை

## ஆண்டு மாநாடு

யாழ்ப்பாணம், வெள்ளி

ஸ்ரீலங்கா ஜாதிகுரு சங்கமய இலங்கைக் கிளையின் வருடாந்த மாநாடு நாளை சனிக்கிழமை யாழ் நகரில் நடைபெறவிருக்கிறது. நாளை பிற்பகல் பெரியகடை பாரதி பாஷியபாடசாலை மண்டபத்தில் நடைபெறும் இம் மாநாட்டில் தாய்ச்சங்கத்தின் சிரேஷ்ட உபதலைவரான திரு பி. லை. குலத்துங்காவும் அகில இலங்கை ஆசிரிய சங்கங்களின் சம்மேளனப் பொதுச் செயலாளர் திரு. டபிள்யூ சந்திரபாலாவும் விசேஷ பேச்சாளர்களாகக் கலந்து கொள்ளவர்.

சமசம்பளத்தை 74ம் ஆண்டுவரை தாமதிக்காது முன்னதாகவே அமுல் நடத்துதல், சால தோட்டப்பாடசாலைகளையும் அரசாங்கம் பொறுப்பேற்பதுடன் அவற்றில் கடமையாற்றிய ஆசிரியர்களையும் அங்கீகரித்து அவர்கள் பழைய சேவைக்காலத்தைக் கணித்தல் பிரதேச ஆசிரிய இடமாற்றச் சபையை நடைமுறைப்படுத்தல் முதலிய பிரேரணைகள் மாநாட்டில் பரிசீலனைக்கு எடுக்கப்படும்.

## முடிக்குரிய வழக்கறிஞர்

காலி வியாழன்

காலி மாவட்ட முடிக்குரிய வழக்கறிஞராக காலியைச் சேர்ந்த திரு டபிலி சமரவிக்கிரம நியமனம் பெற்றுள்ளார். அண்மையில் ஓய்வுபெற்றுள்ள திரு சுமித்ரா நாநாயக்காரவுக்குப்பதிலாகவே இவரது நியமன இடம்பெற்றுள்ளது கடந்த 23 வருட காலமாக இவர் காலி வழக்கறிஞர் குழுவில் அங்கத்துவம் வகித்துள்ளதுடன் ஆரம்பத்தில் வழக்கறிஞராகவும் கடமையாற்றியுள்ளார்.

## நூல்வெளியீட்டு

யாழ்ப்பாணம் வெள்ளி

இரசிகமணி கனக செந்திநாதன் தொகுத்த 'ஈழமணியினிலே - நூல்நயம்' நூல் வெளியீட்டுவிழா நாளை மாலை 5-30 மணியளவில் மதுரகவி இ. நாகராஜன் தலைமையில் நடைபெறவிருக்கிறது. யாழ் இலக்கிய வட்ட வெளியீடான இந்நூலின் வெளியீட்டுரையை திருமதி வள்ளிநாயகி இராமலிங்கம் [குறமகள்] நிகழ்த்துவார். திரு க இராசநாயகன் க. சோமசுந்தரன் ஆகியோர் ஆய்வுரை நிகழ்த்துவர். திரு நா. இராசரத்தினம் முதற் பிரதியைப் பெறுவார்.

யாழ் மாநகரசபை பொழுது போக்கு மண்டபத்தில் நடைபெறும்

# பிரதமர் சிறிமாவுக்கு திருமதி நிக்ஸன் விருந்து

வாஷிங்டன், அக். 21

அமெரிக்காவுக்கு விஜயம் செய்துள்ள இலங்கைப் பிரதமர் திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயகாவுக்கு அமெரிக்க அதிபர் நிக்ஸனின் துணைவியார் வெள்ளை மாளிகையில் தேனீர் விருந்தளித்து மகிழ்ந்தார்.

ஜனாதிபதி நிக்ஸன் கடந்த செவ்வாய்க்கிழமையன்று இலங்கைப் பிரதமர் ஸ்ரீமாவோ ஆர். டி. பண்டாரநாயக்காவுடன் தென் ஆசிய மற்றும் அனைத்துலக நிலைமைகள் குறித்து பேச்சுவார்த்தை நடத்தினார். இரு நாட்டுத் தலைவர்களும் அனைத்துலக பொருளாதார நிலைமைகள் உள்ளிட்டு ஜனாதிபதியின் உத்தேச பீக்கிங், மாஸ்கோ விஜயங்கள் மற்றும் கலந்துரையாடினார்கள் என்று வெள்ளை மாளிகை அறிவித்தது.

ஐக்கிய நாடுகள் பொதுச்சபையின் கூட்டத்தில் கலந்துகொள்ளுவதற்காக பிரதமர் பண்டாரநாயக்கா அமெரிக்காவிற்கு வந்திருந்தார். ஜனாதிபதி நிக்ஸனைச் சந்தித்த பின்னர், பிரதமர் அமெரிக்க ராஜாங்க காரியதரிசி ரோஜர்ஸ் அவர்களை காரியதரிசியின் அலுவலகத்தில் சந்தித்தார்.

### நண்பகல் விருந்து

இலங்கைப் பிரதமரை கௌரவிக்கும் முகமாக ராஜாங்க காரியதரிசி அளித்த நண்பகல் விருந்தில் திருமதி பண்டாரநாயக்கா கலந்து கொண்டார். செவ்வாய்க்கிழமையன்று மாலையில் ஜனாதிபதியின் பாரியார் திருமதி நிக்ஸன், வெள்ளை மாளிகையில் இலங்கைப்பிரதமருக்கு தேனீர்விருந்தளித்தார்.

### பத்திரிகைகள் பாராட்டு

இலங்கைப் பிரதமர் கடந்த செவ்வாய்க்கிழமையன்று அமெரிக்க மாதர் தலைவிகளை சந்தித்தார் அல்லவா? இந்த சந்திப்பு பற்றிய செய்திகளை அமெரிக்க பத்திரிகைகள் பெரிதாக வெளியிட்டன. இலங்கை ஸ்தானிகர் தெனிஸ் கனகரத்தினத்தின் இல்லத்தில் நடைபெற்ற இந்த சந்திப்பின்போது பத்திரிகை புகைப்படப் பிடிப்பாளர்கள் சுமார் இரண்டு மணிநேரத்திற்கு படங்களை எடுத்த வண்ணமாகவே இருந்தனர்

பத்திரிகைகள் பிரஸ்தாப சந்திப்புபற்றிய செய்திகளை வெகுவாக வெளியிட்டிருந்தன. அத்துடன் பிரதமரின் சந்திப்பின்போது பத்திரிகை நிருபர்களுடன், வாஷிங்டன் கொலம்பியா நிருபர்களும் வேர்ஜீனியா மாதர் சஞ்சிகையின் ஆசிரியரும் சமூகமளித்திருந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. நிருபர்கள் அடக்கத்துடனும் மரியாதையுடனும் பிரதமரிடம் கேள்விகளைக் கேட்டனர்.

வாஷிங்டன் ஸ்டார் நிருபர் பிரதமருடன் நடாத்திய பேட்டிபற்றி பத்திரிகையில் எழுதுகையில் 'கூட்டுச்சேரா நாடுகளின் மகாநாடுகள் பலவற்றில் பங்குபற்றியுள்ள இலங்கைப் பிரதமர், ஜனாதிபதி நிக்ஸனின் உத்தேச சீன விஜயத்தை வரவேற்றார். உலகநாடுகளின் தலைவர்கள் ஒருவருடன் ஒருவர் பேசவேண்டும், அத்தகைய சந்திப்புக்களின் பலாபலன்கள் எம்முறையில் அமைந்தாலும் அத்தகைய சந்திப்புகள் உலக நெருக்கடியை தளர்த்த உதவுமென இலங்கைப் பிரதமர் குறிப்பிட்டாரென்று எழுதியுள்ளார்.

வாஷிங்டன் போஸ்ட் பத்திரிகையின் நிருபர் பிரதமருடன் நடாத்தியபேட்டி பற்றி பின்வருமாறு குறிப்பிட்டார். இலங்கை பல நாடுகளில் இருந்து வைத் தொழில் உதவியைப் பெற

[4-ம் பக்கம் பார்க்க]

### சூயஸ் பகுதியில்

# துண்டுபிரசுரம் வீசிய இந்திய சாமி எங்கே?

கெய்ரோ, அக். 21

சூயஸ் கால்வாய்ப் பகுதியில் சில வாரங்களுக்குமுன் விமானத்தில் பறந்து சமாதானத் துண்டுப் பிரசுரங்களை இந்திய சாமியார் ஒருவர் வீசியதாக செய்திவந்ததல்லவா? இந்தச்சாமியார் என்ன ஆனார் பற்றி இப்பொழுது தகவலே இல்லையாம். இவர்பற்றி இங்குள்ள இந்தியத் தூதரகம் இப்பொழுது கவலைகொண்டுள்ளது.

அமெரிக்க நண்பர் ஒருவருடன் இங்கு தனி விமானம் ஒன்றின்மூலம் வந்து இறங்கிய சிவானந்த சுவாமி விஷ்ணு என்பவர் நலமாக இருக்கிறாரா என்பதற்கான விபரங்களைத் தெரிக்குமாறு கோரி இங்குள்ள இந்திய தூதரகம் எகிப்து வெளிவிவகார அமைச்சகத்திடம் ஒரு குறிப்பை ஒப்படைத்துள்ளது.

அவர்கள் இருவரும் சூயஸ் கால்வாய்ப் பகுதியில் விமானத்திலிருந்து சமாதானத்துண்டுப் பிரசுரங்கள் மலர்கள் முதலானவைகளை வீசிவிட்டு கெய்ரோவில் இறங்கியதாகக் கூறப்படுகிறது.

எகிப்து ராணுவ அதிகாரிகள் சிவானந்த சுவாமி விஷ்ணுவை விசாரிப்பதற்காக இன்னும் காவலில் வைத்திருப்பதாக நம்பப்படுகிறது. ஆனால் அந்த இருவரும் வெளியே அனுப்பப்பட்டுவிட்டனரா அல்லது காவலில்தான் இருக்கின்றனரா என்று அதிகாரிகளால் கூற முடியவில்லை.

அந்த சாமியார் இந்திய பாஸ்போர்ட் வைத்திருக்கிறாரா என்பது இந்திய தூதரகத்துக்கு தெளிவான விபரம் ஏதும் இல்லை. அவரைச் [illegible] டிருக்கிறது.

### செயற்கைக் கிரகத்தை அழிக்கும் விமானம்

நியுயோர்க், அக். 21

விண்வெளியில் உளவு பார்க்கும் செயற்கைக் கிரகங்களை அடித்து நொறுக்கிவிடக்கூடிய ஆயுதங்களைக் கொண்ட விண்வெளி விமானங்களை சோவியத்யூனியன் கண்டுபிடித்திருக்கிறதாம் இவ்விமானங்களைக் கொண்டு நடத்தப்பட்ட சோதனைகள் வெற்றியளித்திருப்பதாகச் செய்திகள் கூறுகின்றன

# கார்ச்சாரதி வேலை நீக்கம்: எஜமானி தற்கொலை

காலி, வியாழன்

கார்ச்சாரதியைத் தமது கணவர் வேலையிலிருந்து விலக்கியதினால் மனமுடைந்து மணமான ஓர் இளம் பெண் நச்சுத்திராவகம் அருந்தித் தற்கொலைசெய்து கொண்டனர்.

இச்சம்பவம் காலிப்பகுதியில் நடைபெற்றுள்ளது. இது பற்றி மரணமான பெண் கமலா இல்டா பெர்னாண்டோவின் கணவர் டபிள்யு. எச். பிரேமதிலக பெர்னாண்டோ மரணவிசாரணையில் சாட்சியமளிக்கையில், தமது மனைவி கார்ச்சாரதியுடன் நட்புக்கொண்டிருந்ததாகத் தாம் சந்தேகித்ததாகவும், மனைவி அவரது பெற்றோரின் வீட்டுக்குச்சென்ற சமயம் சாரதியை வேலையிலிருந்து நீக்கியதாகவும், வீடு திரும்பிய தனது மனைவி மீண்டும் சாரதியை வேலையில் சேர்த்துக்கொள்ளும்படி கேட்டபோது தாம் மறுத்ததைத் தொடர்ந்து மனைவி சில நாட்கள் மனமுடைந்து காணப்பட்டதாகவும் தெரிவித்தார்.

தற்கொலை எனத் தீர்ப்பளிக்கப்பட்டது.

......

## ப. ச. கூட்டத்தில் வாக்குவாதம்

சங்கானை, வியா

சங்கானை கிராம அபிவிருத்திச் சங்கக் கூட்டம் உபதலைவர் திரு செ. சிவரத்தினம் தலைமையில் சங்கானை கிராமசேவகர் காரியாலயத்தில் நடைபெற்றது. பட்டினசபை சங்கானை பஸ் நிலையத்தில் கடைகள் கட்டும் தீர்மானத்தையொட்டி அங்கத்தவர் களிடையே பலத்த வாக்குவாதம் ஏற்பட்டது.

பொதுமக்கள் போக்குவரத்து நலன்கருதி இரவில் பஸ் ஒன்றை நிறுத்தி வைக்க இ. போ. ச. ஆரம்பித்துள்ளது. மேலும் பல இடங்களுக்கு பஸ் சேவையை விஸ்தரிக்கும் சந்தர்ப்பத்தில் பஸ்களை நிறுத்தி வைப்பதற்கு இடம்போதாமையால் ப. சபைத் தீர்மானத்திற்கு கடும் எதிர்ப்புத் தெரிவிக்க வேண்டும் என அங்கத்தவர் ஒருவர் சுட்டிக் காட்டினார்.

தலைவர் இதுவிடயம் பரிசீலனை செய்தபின் மறு கூட்டத்தில் தெரிவிப்பதாக அறிவித்தார்.

# இன்றைய பலன்

ஐப்பசி மாதம் 5-ம் திகதி வெள்ளிக்கிழமை (22-10-71)

மேஷம்: நண்பர்களே காலை வாரிவிடக்கூடும். சிலருக்கு அன்னிய வாசம் ஏற்படலாம். சிறப்பான தினம்.

ரிஷபம்: கலைத்துறை வழியால் பொருள் வரவுக்கு இடமுண்டு. கண்ணியமான நடவடிக்கைகளில் ஈடுபடுவீர்கள். புதிய நண்பர்கள் சேருவார்கள்.

மிதுனம்: சதிசெய்வதற்கு சாதகமான சந்தர்ப்பத்தை எதிர்பார்த்துக் கொண்டிருப்பர். பிரயாணத்தை தவிர்க்கவும் இறைநம்பிக்கை நன்று.

கடகம்: பிரமுகர்மூலம் நல்ல செய்தியும் கிடைப்பதற்கு இடமுண்டு. முதியவர் ஒருவர் உங்களுக்கு தக்க சமயத்தில் ஆதரவு தருவார்.

சிம்மம்: எதிர்கால மதியில் ஏற்படும் மன மாற்றம் உங்கள் செல்வாக்கை வளர்க்கும். இன்று சுபதினம்.

கன்னி: மக்களின் ஆதரவு கிடைக்கும். அரசியல் வாதிகளுக்கு செல்வாக்குப் பெருகும். பொன்னான நாள்.

துலாம்: பண விவகாரத்தின் மூலம் பகை தோன்றலாம் தொழில் துறையில் அதிக கவனம் செலுத்தவும்.

விருச்சிகம்: கண்களில் கனல் தெறிக்கும், கருத்தினில் கர்வம் தோன்றும் வெல்கையில் கோவலரால் குன்றிடும் புகழும் தானே

தனுசு: நண்பர்களுக்கு மத்தியில் அபிப்பிராயபேதம் தோன்றக்கூடும். உணர்ச்சி வசப்படாதிருக்கவும்.

மகரம்: கல்வித்துறையில் முன்னேற்றம் உண்டு. தாய்வழி ஆதரவு தாராளமாகக் கிடைக்கும். வாகனநலனுக்கும் இடமுண்டு.

கும்பம்: புதிய முதலீடுகள் வெற்றியளிக்கும். குடும்பத்தில் சுமுகமானசூழ்நிலை தென்படும் கொண்டாட்டங்களும் உண்டு.

மீனம்: குழந்தை யொன்றின் உடல்நலம் பாதிக்கப்படலாம். சிறிய விடயத்திற்கும் அதிக கோபம் தோன்றக்கூடும்.

சோதிடக்கலாநிதி
திருமலை க. வேலுப்பிள்ளை

# கந்த சஷ்டி தினத்தில் கந்தன் புகழ் பாடுவோம்

வேதமே தேடரிய போதனே வேற்படை
கொண்ட வேலா
சூதத்தின் வடிவு கொண்ட சூரனைத் தடிந்த சூரா
மாதுரியக் கனிய தீந்து மாண்புற ஔவையை
வென்றோய்
மாதுயர் வள்ளியை மணந்த மகபதி
போற்றி போற்றி
சற்றவப் பொதிய வெற்பிற் றங்கிரு
முனிவர்க் கந்நாள்
அன்புடன் விருந்து மேலா ணருந்தமி ழுபதேசித்த
செந்திலா கதிரை காதி திருத்தணி தோறும் மேவி
வந்தனை புரிவோர்க் கன்பாக வரமளி
வனசா போற்றி
மாமர மான சூரன் மாளவே விடுத்து மேலசம்
தாமரை தன்னில் மேவும் நாமகள் மணாளன்
றன்னைப்
பிரணவப் பொருளுக் கர்த்தமுரையெனக்
கேட்டுக் குட்டித்
திரமுறச் சிறையி லிட்டுத் தெளிவுற
வைத்தாய் போற்றி
பன்னிரு கரங்கள் கொண்ட பராபர முருக
செவ்வேள்
கன்னியரிருவர் தம்மைக் கலந்தருளியுங் கந்தா
நின்னுரு வன்றி வேறோர் நினைவகத் துருத வன்பர்
முன்னிய யாவு மீயும் முத்தமிழ் முருக போற்றி
— கந்தையா

# சனசமூக நிலைய ஆண்டுக் கூட்டம்

சுழிபுரம், வியாழன்

சண்டிலிப்பாய் வடக்கு சனசமூக நிலையத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் நடைபெற்றது. கூட்டத்துக்கு தலைமை வகித்துப் பேசிய தலைவர் திரு ச. கா. சபாநாதன் தமது தலைமைப் பேருரையில் சண்டிலிப்பாய் இளைஞர்கள் இன்று தொடக்கம் ஒரு புதிய சாப்தத்தை உருவாக்க முன்வந்திருப்பதையிட்டு மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன். எமது சனசமூகநிலையம் கூடிய விரைவில் ஓர் புதிய கட்டடத்தில் அடுத்த ஆண்டு முதல் செயல்பட ஒத்துழைப்பு மிகவும் அவசியமென்றார்.

புதுவருட நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

போஷகர் திரு க. நாகமணி, தலைவர் திரு ச. கா. சபாநாதன், உபதலைவர் திரு இ. குஞ்சரலிங்கம், செயலாளர் திரு மு. பரயோகலிங்கம், உபசெயலாளர் திரு பொ. பாலசிங்கம் தனாதிகாரி திரு க. குணேஸ்வரன். உப தனாதிகாரி திரு நா. சிவராசா, பத்திராதிபர் திரு தி. தெய்வேந்திரன், உப பத்திராதிபர் திரு சி. சிவதாசன்.

## 150-வது கிறீஸ்தவவிழா

பருத்தித்துறை, வியா

கட்டைவேலி கிறீஸ்தவ தேவாலயத்தின் 150-வது ஆண்டுவிழா டிசம்பர் மாதம் 11ம், 12ம், திகதிகளில் நடாத்தப் படவேண்டுமென கட்டைவேலி கிறீஸ்தவ வாலிபர் சங்கம் தீர்மானித்துள்ளது. இவ்விழாவில் கிறீஸ்தவ மதபீடத் தலைவர்களான திருவாளர்கள் டென்சில் டி சில்வா, சீ ஜெடானியல் ஆகியோர் பிரதம அதிதிகளாகக் கலந்து கொள்ளவிருக்கின்றனர்.

# விவசாயிகளுக்கு கடனுதவி

உடுப்பிட்டி, வியாழன்

வடமராட்சி தெற்கு-மேற்குப் பிரிவிலுள்ள விவசாயிகளுக்கென கிராமசேவகர் எல்லா இலாகாக்களிலும் 1,129 புசல் விநியோகம் செய்யப்படுவதுடன் நடுத்தர நீண்டகால உற்பத்திக் கடனாக ரூபா 65,600-ம். குறுகிய கால கடனாக 69,550 ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இங்குள்ள விவசாயிகளின் தேவைகளுக்கு அரசாங்கம் 800 மண்வெட்டிகள், 90 தண்ணீர்ப் பம்புகள் 12 இருசில்லு டிராக்டர்கள் 285 அர்ச் முட்கம்பிகள் 40 தெளிகருவிகள் போன்ற உபகரணங்களை விநியோகம் செய்துள்ளது

இவ்விபரங்கள் வடமராட்சி தெற்கு-மேற்கு காரியாதிகாரி பிரிவின் விவசாய செயற்பாடு திட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதற்கான நடவடிக்கைகளை இப் பகுதிக் காரியாதிகாரி திரு. கே. மாணிக்கவாசகர் மேற்கொண்டுள்ளார்

## கந்தசஷ்டி விழா

யாழ்ப்பாணம், வெள்ளி

அகில இலங்கைச் சைவக் குருமார் அர்ச்சகர்சபையின் ஆதரவில் கட்டுவன் இயற்றம்மைசிட்டி மாரியம்மாள் ஆலயத்திலும், குரும்பசிட்டி அம்மாள் ஆலயத்திலும் நேற்று தொடக்கம் கந்த சஷ்டி விழாவும் புராணப் படிப்பும் நடைபெற்றுவருகிறது

தினமும் அபிஷேகம் விசேஷ ஆராதனையையடுத்து 'சூரபன்மன் வதைப் படலம்' புராணபடனமும் தொடர்ந்து நடைபெறும் 26-ந் திகதி செவ்வாய்க்கிழமை குரும்பசிட்டி சிவசுப்பிரமணியப் பெருமானின் திருக்கல்யாண உற்சவம் இடம்பெறும்

# புதிய நொத்தாரிஸ்



யாழ்ப்பாணம், வெள்ளி

சாவகச்சேரி தெற்கைச் சேர்ந்த வல்லிபுரம் சின்னையா. பிரசித்த நொத்தாரிஸாக சாவகச்சேரிமாவட்ட நீதிபதி திரு இராசரத்தினம் முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.

முன்னைநாள் பட்டணசபை உபதலைவரான இவர், தென்மராட்சி ஐக்கிய பண்டகசாலை, செயலாளர்பொருளாளராகவும், தனங்கிளப்பு வடக்கு பயிற்செய்கைக் குழுத்தலைவராகவும், சனசமூக நிலைய தலைவராகவும் கடமையாற்றியுள்ளார்.

......

## பிரதமர்...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

இன்ற பொழுதிலும். உலக நாடுகள் பலவற்றில் கைத்தொழில் விருத்தியால் ஏற்பட்டுள்ள பிரச்சினைகளை தவிர்க்க திடசங்கற்பம் பூண்டுள்ளது என குறிப்பிட்டுள்ளது.

வாஷிங்டன்டெய்லிநியூஸ் இலங்கைப் பிரதமரின் புகைப்படத்துடன் வெளியிட்டுள்ள செய்தியில் இந்து சமுத்திரத்தில் கூட்டுச்சேரா சிறிய நாடுகள் சமாதானத்துடன் ஒருமித்து தனியாகவாழ விரும்புகின்றன என்று பிரதமர் குறிப்பிட்டதாக செய்தி வெளியிட்டுள்ளது.





குளிர்மையான,
மெந்தோல் பில்டர் முனை
சிகரெட்டுக்கள். தற்கால நவீன
புகையின்பத்திற்கு
பசுமையுடன் உங்களை
அழைத்துச்செல்வன

நீடிய குளிர்மையான மறுமலர்ச்சி மெட்டர்ஹோன்

CTC சிலோன் டுபாக்கோ கம்பனி லிமிட்டெட்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜி. ஸி. ஈ. வினாக்கொத்து

# 'பழிவாங்கும் நடவடிக்கையல்ல!'

## மகாதந்தில விளக்கம்

மட்டுவில், புதன்

"கடந்த வருடம் டிசம்பர் ஜி. ஸி. ஈ பரீட்சையில் திடீர் வீழ்ச்சி ஏற்பட்ட உண்மைக் காரணத்தை ஆராய்ந்தறிவதற்காகவே வினாக்கொத்து சகல பாடசாலைகளுக்கும் அனுப்பப்பட்டது. யாரையும் பழிவாங்கும் நடவடிக்கையுடன் இந்த வினாக்கொத்து அனுப்பப்படவில்லை'

இவ்வாறு மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலய பரிசளிப்பு விழாவின் போது பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு பேசிய வடமாநில வித்தியாதிபதி திரு. மகாதந்திலா குறிப்பிட்டார். வித்தியாலய அதிபர் திரு. எஸ். சிவலிங்கம் தலைமையில் நடந்த விழாவில் திரு. மகாதந்திலா மேலும் பேசுகையில் கூறியதாவது:

வடபகுதி மாணவர்களின் கல்வி நிலையில் என்றுமே உயர்ச்சியான நிலையிலிருந்து வந்துள்ளார்கள். அப்படிப்பட்டவர்கள் திடீரென்று கடந்த 1970 டிசம்பர் பரீட்சையில் திடீர் வீழ்ச்சி கண்டார்கள். இதற்கு யார் காரணர்? ஆசிரியர்களா, மாணவர்களா, பெற்றோர்களா, அதிபர்களா? இதனை தீர விசாரித்து தவறு எங்கே இருக்கிறது என்பதனைக் கண்டுபிடிக்கவே வினாக்கொத்து ஒன்றினை அனுப்பி வைத்தோம். பரிபூரணத்துவம் நிறைந்த கல்வி மறுமலர்ச்சி ஒன்று ஏற்பட வேண்டுமென்பதே எமது குறிக்கோள்" என்றார்.

சாவகச்சேரி எம். பி திரு. வி. என். நவரத்தினமும் பேசினார்.

# இ. போ. ச. வருமானத்தை அதிகரிக்க புதியமுறை

கோட்டை, புதன்

இலங்கை போக்குவரத்துச் சபையின் வருமானத்தை அதிகரிக்க புதிய முறை ஒன்று இப்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு டிப்போவும் குறிப்பிட்டளவு தொகை வருமானத்தை பெற வேண்டுமென்று கேட்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு டிப்போவும் குறிப்பிட்டளவு தொகை வருமானத்தை பெற வேண்டுமென்று கேட்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மூலம் இ போ ச வின் வருமானத்தை அதிகரிக்கலாமென்று நம்பப்படுகிறது.

சென்ற சில நாட்களில் இ போ ச வின் டிப்போக்களில் வருமானம் உயர்ந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# நிக்ஸன் விஜயத்துக்கு கொஸிஜின் வரவேற்பு

ஒட்டாவா, அக் 21

சோவியத் யூனியனுக்கும் சீனாவுக்கும் அதிபர் நிக்ஸன் விஜயம் மேற்கொள்ளவிருப்பதை சோவியத் பிரதமமந்திரி திரு கொஸிஜின் வரவேற்றுப் பேசியிருக்கிறார்.

இருநாடுகளுக்கும் திரு நிக்ஸன் மேற்கொள்ளவிருக்கும் விஜயம் தனித்தனியானவை. இந்த விஜயங்கள் சர்வதேச அமைதிக்கு உதவிபுரிவதாக அமையும் என்று திரு கொஸிஜின் தெரிவித்தார்.

சோவியத் நாட்டிலுள்ள யூதர்கள் இஸ்ரேலில் போய்க் குடியேறுவதில் தமது நாடு சில கட்டுப்பாடுகள் விதித்திருப்பது உண்மைதான் என்று திரு கொஸிஜின் ஒப்புக் கொண்டார். இஸ்ரேலுக்கு பயிற்சி பெற்ற ராணுவ சிப்பாய்களான யூதர்களை நாம் அனுமதிக்க முடியாது என்றார் அவர்.

திரு கொஸிஜினுக்கு கனடாவில் பல இடங்களிலும் பெரும் எதிர்ப்புகள் தெரிவிக்கப்பட்டன. ஆர்ப்பாட்டக்காரர்கள் பல இடங்களிலும் திரு கொஸிஜினுக்கு எதிராகக் கோஷமிட்டனர். ஹங்கேரிய அகதியான வாலிபர் ஒருவர் திரு கொஸிஜினைத் தாக்கிய சம்பவத்தின் பின்னர் அவருக்கு பலத்த பந்தோபஸ்து அளிக்கப்பட்டு வருகின்றது.

## உள்ளூராட்சி மன்றங்களிலுள்ள இந்த ஊழியரின் கஷ்ட நிலை

கேதீஸ்வரம், வியாழன்

"உள்ளூராட்சி சேவையில் இல்லாத அதே சமயம் உள்ளூராட்சித் தாபனங்களில் பணிபுரியும் லிகிதர்கள், மேற்பார்வையாளர்கள், நூல்நிலைய அலுவலர்கள், பாதுகாவலர்கள், கம்மாணிமார்கள், பணியாளர்கள் பலவருடங்களாகச் சேவையாற்றியும் நிரந்தரமாக்கப்படாது நெடுகிலும் தற்காலிகமாகவே தொழிலாற்றி வருகிறார்கள்."

இவ்வாறு மன்னார் மாவட்ட உள்ளூராட்சி சேவையில்லாத லிகிதர் சங்கக் காரியதரிசி திரு. சு. சிறிசந்திரன் உள்ளூராட்சி பொது நிர்வாக அமைச்சுக்கு அனுப்பியுள்ள மகஜரில் குறிப்பிட்டுள்ளது.

மாநில உள்ளூராட்சி உதவி ஆணையாளருக்கும் அனுப்பப்பட்டுள்ள அம்மகஜரில் கோரப்பட்டிருப்பதாவது:-

உள்ளூராட்சி சேவையில் இல்லாத ஊழியர்கள் தொழிலில் நிரந்தரமற்று இருப்பதுடன் பல தனியார்துறைக் கூட்டுத்தாபனங்களில் வேலை செய்யும் சேவையாளர்களைவிடக் குறைவான ஊதியத்தையே பெறுகிறார்கள். இவர்கள் வாழ்க்கை மிகவும் கஷ்டமாக இருக்கிறது. இக் குறைகளைக் கவனித்து ஆவன செய்து நிவர்த்திக்குமாறு வேண்டுகிறோம்.

## நடுக்கட்டு உத்தியோகத்தர் நலன்புரிச் சங்கம்

யாழ்ப்பாணம், வியாழன்

யாழ்ப்பாண மாநகரசபை நடுக்கட்டு உத்தியோகஸ்தர் நலன்புரிச் சங்கம் அண்மையில் திரு வி பஞ்சரத்தினம் தலைமையில் நடைபெற்றது.

சங்கத்தின் நிர்வாகசபை உறுப்பினர்களாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர். காப்பாளர் யாழ் நகர மேயர் திரு ஏ. டி. துரையப்பா. தலைவர் திரு வி பஞ்சரத்தினம், உப தலைவர் திரு. பொ நடராசா, செயலாளர் திரு மு கிருஷ்ணமூர்த்தி, தனாதிகாரி திரு மு பரமானந்தம், கணக்குப் பரிசோதகர் திரு க பஞ்சாட்சரம், 9 பேர் கொண்ட நிர்வாக சபையும் தெரிவுசெய்யப்பட்டது.

## மன்னார் செய்திகள்

மன்னார், வியாழன்

கடும் வரட்சிக்குப் பின் மன்னாரில் மழைபெய்துள்ளது. தென்மேல் பருவப் பெயர்ச்சிக்காற்று வீசுவது நின்று வடகீழ் பருவப்பெயர்ச்சிக்காற்று தற்போது வீசுவதால் தொடர்ந்து மழை பெய்யுமென்று மன்னார் வானிலை ஆராய்ச்சி நிலையம் அறிவித்தது.

0 0 0

**உதைபந்தாட்டம்**

மன்னார் சென். சேவியர் வவுனியா மகாவித்தியாலயம் ஆகியவற்றிற்கான உதைபந்தாட்டத்தில் வவுனியா மகாவித்தியாலயம் தோல்வியடைந்தது.

முறையே சென். சேவியர் 'ஏ' பிரிவு 9 கோல்களும் 'பி' பிரிவு 3 கோல்களும் போட்டன. வவுனியா மகாவித்தியாலயம் எந்தகோல்களும் போடாமல் தோல்வியடைந்தது

0 0 0

**கோரிக்கை**

புனித ரமளான் மாதத்தை முன்னிட்டு அதிகாலையில் தண்ணீர் விநியோகம் செய்யும்படி கோரி மன்னார் மாவட்ட ஸ்ரீ ல. சு. கட்சியின் மத்தியகமிட்டி மன்னார் பட்டினசபை விசேட ஆணையாளரைக் கேட்டுள்ளது

ரமளான் மாதம் முடியும் வரையும் அதிகாலை 4மணியிலிருந்து அரைமணி நேரத்திற்கு தண்ணீர் விநியோகம் செய்யவேண்டியது அவசியம் என்று அந்த அறிக்கை வற்புறுத்துகிறது.

## பழைய நோட்டு மாற்றப்படவில்லை

கோட்டை, வியாழன்

செல்லுபடியாகாமல் செய்யப்பட்டுள்ள நூறு ரூபாய் 50 ரூபாய் நோட்டுக்கள் இரகசியமாக கமிஷனுக்கு மாற்றிக் கொடுக்கப்படுவதாக கூறப்படுவது பற்றி மத்தியவங்கி ஆராய்ந்துள்ளது. எந்தச் சந்தர்ப்பத்திலாவது பழைய நோட்டுகள் மாற்றிக் கொடுக்கப்பட்டிருப்பதற்கான தடயம் எதுவும் காணப்படவில்லையென்று தெரிகிறது.

## தளபாடங்கள் சேதம்

பருத்தித்துறை, வியாழன்

தீபாவளித் தினத்தன்று இப்பகுதியிலுள்ள பாடசாலையொன்றில் குடிபோதையில் புகுந்த நபர் ஒருவர் பாடசாலைத் தளபாடங்களுக்குச் சேதம் விளைவித்ததாக மேற்படி பாடசாலைத் தலைமையாசிரியர் பொலிசுக்கும் [illegible]

# மன்னார் பகுதியில் கிழமைக்கொரு சிரமதானம்

மன்னார், வியாழன்

கிழமைக்கொரு சிரமதானம் என்ற திட்டத்தின்கீழ் மன்னார் ஸ்ரீ ல சு கட்சி வாலிப முன்னணியின் முதல் சிரமதான வேலையாக முஸ்லிம் வீதியிலுள்ள முதலியார் குளம் திருத்தப்பட்டது.

வாலிப முன்னணித் தலைவரான திரு பி மஹாவல தலைமையில் வாலிப முன்னணி அங்கத்தவர்கள் இச்சிரமதானத்தில் கலந்துகொண்டனர்.

ஒரு நாள்முழுதும் நடைபெற்ற இச்சிரமதானத்தில் வாலிப முன்னணியினர் கடுமையாக உழைத்து குளத்தை ஆழத்தோண்டி அணைகட்டினர். மன்னார் மாவட்ட ஸ்ரீ ல சு கட்சி அமைப்பாளர் ஜனாப் என் எஸ் ஏ காதர் வாலிப முன்னணியினருக்கு இலவச உணவு வழங்கினார்.

# கம்போடியா ராணுவ நடவடிக்கை விஸ்தரிப்பு

## அமெரிக்கா திட்டமிடுகிறதாம்

வாஷிங்டன், அக் 21

கம்போடியாவில் ராணுவ நடவடிக்கையை விஸ்தரிக்க அமெரிக்க ராணுவ பீடம் திட்டம் வகுத்துவருகிறது.

இத்தகவலை 'வாஷிங்டன் போஸ்ட்' பத்திரிகை வெளியிட்டுள்ளது.

கம்போடியாவில் 'வெற்றியடைய ஐந்தாண்டு திட்டமொன்றை' ராணுவத் தளபதிகள் கமிட்டி தயாரித்துள்ளது.

"நேசநாடுகள்" மூலம் அமெரிக்கக் கொள்கையை அமுல்படுத்தும் 'நிக்ஸன் கொள்கையை' கடைப்பிடித்து வெற்றியீட்டுவதே இதன் நோக்கமென்று அமெரிக்க காங்கிரஸ் சபை வட்டாரங்கள் கருதுவதாக மேற்படி பத்திரிகை எழுதியுள்ளது.

"கொரில்லா எதிர்ப்பு யுத்தத்தை" தொடுத்து கம்போடியாவில் தேசபக்த சக்திகளுக்கெதிராக விரிவான ராணுவ நடவடிக்கை எடுப்பது இத்திட்டத்தின் பிரதான அம்சமாகும். இதை சாதிக்க "அமெரிக்க விசேஷ பணி படை" பாணியில் அமைந்த [illegible] துருப்புகள் உபயோகிக்கப் படவுள்ளன. இன்றைய கம்போடியா ராணுவம் 170,000 வீரர்களைக் கொண்டதாகப் பெருக்கப்படவுள்ளது. அதுடன் 1972-ல் 220,000 ஆகவும், 1977-ல் 306,000 ஆகவும் துருப்புகளின் எண்ணிக்கை பெருக்கப்படும்

## சிரமதானம்

சங்கானை, வியா

பண்டத்தரிப்பு இந்துக்கல்லூரி வீதி சிரமதானமூலம் செப்பனிடும் வேலையை சங்கானை மேற்கு கிராமமுன்னேற்றச்சங்கம் மேற்கொண்டுள்ளது. மழை காலத்தில் அம்மன் வீதிக் கருகாமையில் குடியிருப்பவரைப் பாதிக்காதவகையில் வெள்ளம் வடிந்தோடுவதற்கு இந்துக் கல்லூரி ஒழுங்கையில் மதகொன்று அமைப்பது மிக முக்கியம் என்பதை சுட்டிக்காட்டி இதைப் பூர்த்தி செய்வதற்கு நன்கொடைப்பணம் பெற்றுத் தருமாறு வலி மேற்குக் காரியாதிகாரி திரு எம் மாணிக்கநடராசாவிற்கு மகஜர் ஒன்றை கிராமமுன்னேற்றச்சங்க காரியதரிசி திரு குணரத்தினம் அனுப்பி வைத்துள்ளார்.

## கடை உடைத்து திருட்டு

மாவிட்டபுரம் வியாழன்

உரும்பராய்ச் சந்தியில் உள்ள பிரபல்யமான கடையின் கதவு உடைத்து இனந்தெரியாதவர்கள் களவாடினார்களாம். சுன்னாகம் பொலிஸ் பகுதிக்குட்பட்ட உரும்பராய்ச் சந்தியிலுள்ள கடையில் இரவுநேரத்தில் இனந்தெரியாதவர்கள் கதவை உடைத்துப் புகுந்து சுமார் பத்தாயிரம் ரூபா பெறுமதியான பொருட்களைக் களவாடிவிட்டதாகச் சுன்னாகம் பொலிஸில் புகார் செய்யப்பட்டுள்ளது.

இதையடுத்து சுன்னாகம் பொலிஸ்நிலையப் பொறுப்பதிகாரி திரு கி. குணரத்தினம் தீவிரவிசாரணை செய்து வருகிறார்.

நீரில் நஞ்சு

## ஒரு குழந்தை பலி 6 பேர் ஆஸ்பத்திரியில்

வேருவலை வியாழன்

நஞ்சுகலந்த நீரைக் குடித்ததன் காரணமாக ஒரு குடும்பத்தைச் சேர்ந்த ஏழு குழந்தைகள் நோய்வாய்ப்பட்டு களுத்துறை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இந்தக் குழந்தைகளில் ஒன்று மரணமாகியுள்ளதாகவும் தெரியவருகின்றது.

இவர்கள் தண்ணீர் எடுத்துக் குடித்த குளத்தில் இனந்தெரியாத எவரோ நஞ்சு தெளித்திருக்கவேண்டும் என்று சந்தேகிக்கப்படுகின்றது.

## ஓராண்டு நீடிப்பு

பருத்தித்துறை, வியா

உடுப்பிட்டிச் சந்தியில் அமைக்கப்பட்டுள்ள தொழில்நுட்பப் பயிற்சிநிலையம் புத்தளத்திற்கு மாற்றப்படல் வேண்டுமென்ற அரசாங்க உத்தரவைத் தொடர்ந்து கட்டைவேலி பலநோக்குக் கூட்டுறவுச்சங்கங்களின் சமாசம் விடுத்த வேண்டுகோளுக்கிணங்க பிரபல தொழிற்சங்கவாதி திரு பொன் குமாரசாமி மேற்கொண்ட நடவடிக்கைகள் காரணமாக மேற்படி பயிற்சிநிலையம் தொடர்ந்து ஒரு வருடகாலத்திற்கு இதே இடத்திலேயே இயங்க அனுமதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

## சாராய வேட்டை

மாவிட்டபுரம், வியாழன்

காங்கேசன்துறைப் பொலிசார் நடாத்திவரும் சாராய வேட்டையில் பல ஆண்களும் பெண்களும் கைதுசெய்யப்பட்டனர்.

காங்கேசன்துறைபொலிஸ் நிலையக் குற்றத்தடுப்புப் பகுதி இன்ஸ்பெக்டர் திரு வி செல்லையா, சார்ஜண்ட் எம் தம்பையா ஆகியோர் இந்த சாராய வேட்டையில் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.

கட்டுவன்பகுதியில் பொலிசார் நடத்திய வேட்டையின்போது ஒருபெண் வடிசாராயத்துடனும், உபகரணங்களுடனும் கைதுசெய்யப்பட்டாராம். பிரஸ்தாப பெண்ணை மல்லாகம் நீதிபதி முன்னிலையில் ஆஜர் செய்த சமயம் 225 ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

